www.tamilarangam.net

# போராளிகள் படுகொலைகள் !

# ஏமாளிகள் தமிழ் மக்கள் !

P. L. O. T. ஐச் சேர்ந்த தோழர் சுந்தரம் படுகொலை.

T. E. L. A ஐச் சேர்ந்த தோழர் ஒபரேய் தேவன் படுகொலை.

L. T. T. E ஐச் சேர்ந்த தோழர்கள் அப்பு, மைக்கள் படுகொலைகள்.

T. E. L. E ஐச் சேர்ந்த தோழர் ஜெகன் படுகொலை.

T. E. L. A ஐச் சேர்ந்த தோழர்கள் கூச், சேகர் படுகொலைகள்.

L. T. T. E ஐச் சேர்ந்த 6 தோழர்கள் சுழிபுரத்தில் படுகொலை.

தோழர்கள் மனோமாஸ்டர், இறை, உமை படுகொலைகள்.

T. E. L. O தலைவர் தோழர் சீறி மீதான கொலை முயற்சி.

P. L. O. T தலைவர் தோழர் உமா, ஜோதீஸ்வரன் மீதான கொலை முயற்சி.

இவை அனைத்தும் மக்களுக்கு தெரிந்த மக்கள் மத்தியில் நடந்த சம்பவங்கள். திரை மறைவில் இன்னும் வெளிச்சத்திற்கு வராத கொலைகளாக பல உள்ளன. ஜெயா மாஸ்டர், ராஜ்மோகன். ரமேஷ், சிவனேஸ்வரன் இவர்களுக்கு என்ன நடந்தது? என்பதும் இவர்களும் மேலுள்ள பட்டியலில் சேர்க்கப்படவுள்ளனரா? என்பதும் மர்மமாக உள்ளது. அவர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கான விடுதலைக்காகப் போராடும் நோக்கில் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் எனினும் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அல்லது சுட்டுக்கொல்ல முயற்சிக்கப்பட்டது. இவர்களைக் கொலைசெய்தது இவர்களுடைய எதிரியான J.R. அரசுமில்லை, அதன் ஏவல் நாயான இராணுவமுமில்லை. தாமும் தமிழ் மக்களுக்காக போராடுவதாக கூறும் சக இயக்க போராளிகளாலேயே வெட்கக்கேடான முறையில் இவர்கள் சுடப்பட்டனர் (காலம் ஒருநாள் மாறத்தான் போகிறது. அன்று நிச்சயம் இவர்களுடைய கல்லறைகள் பேசத்தான் போகின்றன.) தொடர்ச்சியான இவ் நிகழ்வுகளுக்கான காரணத்தை ஆராய்வதே இப்பிரசுரத்தின் நோக்கமாகும்.

துப்பாக்கியேந்தாமல் பிரச்சனைகளை தீர்க்க முடியாதென்பது வேறு, துப்பாக்கியே பிரச்சனைகளையெல்லாம் தீர்க்குமென்பது வேறு. முன்னையது மக்களுக்கும் எதிரிக்குமிடையிலான அடிப்படை பிரச்சனைகளை துப்பாக்கியேந்தியே தீர்க்க முடியுமென்பதை வலியுறுத்துகிறது. பின்னையது சகல பிரச்சனைகளுக்கும் சர்வரோகநிவாரணி துப்பாக்கியால் சுடுவதே தீர்வு என்பதை வலியுறுத்துகிறது. இன்று துப்பாக்கி ஏந்திய பல போராளி அமைப்புகளும் பின்னையதையே தங்களின் தாரக மந்திரமாக கொண்டிருக்கின்றனரென்பது அவர்களின் நடவடிக்கைகளிலிருந்து தெரிய வருகின்றது. ஏனெனில் சோசலிசம் பேசித்திரியும் இந்த சந்தர்ப்பவாதிகள் துப்பாக்கியால் சுடுவதற்குப் பெயரே விடுதலை என்ற விதத்தில் செயல்பட்டு திரிகின்றனர். தங்களது சந்தர்ப்பவாதத்தையும் கையாலாகதனத்தையும் மூடி மறைக்க இவர்கள் கையிலுள்ள ஒரே ஆயுதம் துப்பாக்கியால், சுட்டுக்காட்டுவதே. அதைகூட கோழைத்தனமான முறையில் உரிமை கோராத விதத்திலும், தன் அமைப்பிலுள்ளவர்களுக்குக்கூட தெரியாத விதத்திலும், தன் அமைப்பில் தன்னை கேள்வி கேட்பவர்களையேகூட சூழ்ச்சியான முறையில் படுகொலை செய்து மூடி மறைத்து விடுகின்றனர். இப்படி இந்த அமைப்புகள் ஈழத்திலும் தமிழகத்திலும் தன் அமைப்புப் போராளிகளையே படுகொலை செய்து மூடி மறைத்துள்ளது ஏராளம். இது இவர்கள் கூறும் சோசலிசத்தின் பகுதியோ என்ற சந்தேகத்தையே எமக்கு எழுப்புகிறது. இவர்களது அமைப்புகள் **போராளிகளின் கூடாரமா ?** அல்லது **கொலைகாரர்களின் கூடாரமா ?** என்ற **கேள்வியையே எழுப்புகிறது.**

ஏனெனில் கொள்கை வரையறையில்லாமல் எப்படி இவர்கள் பல பிரிவுகளாக பிளவுபட்டு இருக்கிறார்களோ அதைபோன்றே யாரை சுடுவது எதற்காக சுடுவது என்பதிலும் இவர்களுக்கு கொள்கை வரையறையே கிடையாது. இவர்களுடைய தமிழீழ தனிநாடு கோரிக்கையை இதுவரை அங்கீகரிக்காத எதிர்க்கின்ற இந்திய, இலங்கை அரசுகள் மறைமுகமாக இவர்களின் பின்னணியாக நின்று இதனை ஊக்குவித்து வருகின்றன. அவர்களின் பின்னணியில்தான் இவர்கள் இவ்வளவு போராளிகளையும் படுகொலை செய்து மூடி மறைக்க முடிகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய, இலங்கை அரசுகள் மறைமுகமாக இதை ஊக்குவிக்க காரணமென்ன என்பது எல்லோரும் அறிந்த விஷயம். தமிழன் தனக்குள்ளேயே பிளவுபட்டு தமிழனே தமிழனை சுட்டுக் கொண்டு மடிந்தால்தான், ஒவ்வொரு பிரிவும் அடுத்த பிரிவை பரம எதிரியாக கருதினால்தான் தமிழின ஒற்றுமையென்பது சாத்தியமற்றதாகும். தமிழின விடுதலைக்கென கிளம்பிய பிரிவுகள் ஒன்றுபடாதிருந்தால்தான் ஒடுக்குமுறையை உடைத்தெறியும் இவர்கள் குறிக்கோள் சாத்திய மற்றதாகும். தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை நீடிக்கும்வரைதான் இலங்கையிலும், இந்தியா விலும் இவ்வினவெறி அரசுகள் தமிழன் மீது சவாரி செய்யலாம். இதனை ஈடேற்றி கொள்ளவே இந்திய, இலங்கை இனவெறி அரசுகள் இப்பிரிவுகளை இப்படுகொலைகளுக்கு ஊக்குவிக்கின்றன.

தனிநாட்டுக் கொள்கையின், ஆயுதப் போராட்ட நடைமுறையின் உறுதியான ஜாம்ப வான்களாக தம்பட்டமடிக்கும் இந்த சந்தர்ப்பவாத பேர்வழிகள் இந்தியா சென்றவுடன் அக் கொள்கைகளை காற்றில் விட்டுவிட்டு அக்கொள்கைகளுக்கும் எமக்கும் தமிழக தமிழனுக்கும் நேரெதிரான இந்திய அரசையும் அதன் அடிவருடி ஓட்டுகட்சிகளையும், எசமானாக ஏற்றுக் கொண்டு அவர்களின் கருணை கடாட்சத்தைப் பெறவேண்டி, நீ முந்தி நான் முந்தியென போட்டி போட்டுக்கொண்டு காவடி தூக்குகின்றனர். இப்படி காவடி தூக்கும் சந்தர்ப்பவாதிகள் பிளவு பட்டு பல பிரிவுகளாக செயல்பட்டாக வேண்டியிருப்பதற்கான கொள்கை வேறுபாடுகளை தமிழ் மக்கள் முன்வைக்க முடியுமா? **முடியாது. ஏனெனில் பிளவுகளுக்கான காரணம் அவர்களுக்கு இடையிலான தனிநபர் மேலாதிக்க போட்டியே தவிர, கொள்கை வேறுபாடுகளல்ல.**

இப்பிரிவுகள் ஒற்றுமையாக பின்பற்றும் கொள்கை வேறுபாடென்பது ஒன்றே ஒன்று தான். அது என்னவெனில் கசாப்புகடைக்காரன் ஆட்டை வெட்டுவதுபோல அமைப்பின் தலைவர் நினைத்தவரையெல்லாம் படுகொலை செய்து மறைத்துவிடுவதுதான். ஏனெனில் துப்பாக்கியே பிரச்சனைகளையெல்லாம் தீர்க்குமென்பதை தவிர வேறெதுவும் இவர்களுக்குத் தெரியாது.

தானடித்தமூப்பாக தான் சொல்லுகின்ற சட்டம் தனக்கே பொருந்தாதென்பது இவர்களது வேதாந்தம். கொள்கை கோட்பாட்டையெல்லாம் கைவிட்டுவிட்டு இந்திய இந்தி இனவெறி அரசை எசமானாக ஏற்று இவர்கள் எப்படி காவடி தூக்குகிறார்களோ அதைபோன்றே தன் அமைப்பில் உள்ளவர்களையும் தனக்கு காவடி தூக்கும்படி இவர்கள் கட்டாயப்படுத்து கின்றனர். மீறுபவர்களை படுகொலை செய்து மறைத்துவிடுகின்றனர். இவர்களை நம்பி ஏமாந்து விடுதலை போராட்ட ஆசையில் இவர்களின் அமைப்பில் சேரும் ஒருவன் உள்ளே நடக்கும் சதி சூழ்ச்சிகளையும் தனிநபரின் வரைமுறையற்ற காட்டு தர்பாரையும் கண்டு சகிக்காது அந்த அமைப்பிலிருந்து விலகினால் அவன் படுகொலை செய்யப்படுவான். விருப்பபூர்வமாக சேர்வதும், விருப்பபூர்வமாக செயல்படுவதும், விரும்பாதபோது விலகுவதும், விரும்பும் அமைப்பில் சேருவதும் அங்கே படுகொலைக்குரிய குற்றமாக கூறப்படுகிறது. ஆனால் அமைப்பின் தலைவரே அமைப்பையே கைவிட்டுவிட்டு மாற்று அமைப்பில் சேர்ந்துவிட்டால் இவ் விதியை வகுத்த தலைவருக்கு இவ்விதி பொருந்தாதென்பதே இப்பிரிவுகளின் வேதாந்தம். ஆனால் அப்படி விலகியதற்காக படுகொலை செய்யப்பட்டவர்களின் கதி அந்தோ!

அணைகள் கட்டப்பட்டு, ஆறு குளம் வெட்டப்பட்டு முன்தயாரிப்பு செய்யப்பட்டால் மட்டுமே பெய்யும் மழை மனிதனிற்கு பாசனத்திற்கு பயன்படும். அல்லாவிடில் வெள்ளசேதம் ஏற்பட்டு பயிர்களையும், கிராமங்களையும் அழித்து மனிதனிற்கு அழிவையே அது ஏற்படுத்தும். அதைப்போன்றே புரட்சிகர கட்சி கட்டப்பட்டு புரட்சிகர நடைமுறையில் செயல்பட்டால் மட்டுமே அது சமுதாய மாற்றத்திற்கு, சமுதாய வளர்ச்சிக்கு பயன்படும். அல்லாவிடில் வறுமையும், பஞ்சமும், வழிப்பறி கொள்ளையையும், திருட்டையுமே உண்டாக்கி மனிதனிற்கு அழிவையே அது ஏற்படுத்தும். எனவே எவ்வளவு காலம், புரட்சிகர கட்சி அமைக்கப்படுவதும் மக்களை புரட்சிக்கு வழிநடத்திச் செல்லுவதும் காலதாமதமாகிறதோ அதுவரையும் திருட்டையும், களவையும் தடுக்க முடியாது. ஏனெனில் ஒரு மனித கூட்டம் இன்னொரு மனித கூட்டத்திலிருந்து நிலங்களையும், வீடுகளையும், உடைமைகளையும் பலாத்காரமாக கைப்பற்றிக்கொண்டு தனி சொத்தையும் ஆண்டான் — அடிமை சமுதாயத்தையும் தோற்றுவித்த காலம் முதல் அடிமை மனிதர்களுக்கு உயிர்வாழ்வதற்கான ஆதாரம் அற்றுப்போய்விடுகிறது. அந்நிலையினால் அன்றிலிருந்து இன்று வரை திருட்டும் களவும் தடுக்க முடியாததாகிவிடுகிறது. ஆனால் இந்த சோசலிச ஜாம்பவான்கள் அந்த அடிமை மக்களை வழிநடத்தி புரட்சியின் மூலம் திருட்டை தடுக்க வக்கற்று சுரண்டும் கூட்டத்தை பாதுகாக்கவேண்டி அந்த அடிமை மக்கள்மீதே இவர்களின் சோஷலிச துப்பாக்கியை ஏவுகின்றனர். இந்நிலைமை மாறும்வரை சோசலிச புரட்சி என்பது வெறும் புலுடாவே.

www.tamilarangam.net

தமிழனைக் கொல்லும் சிங்கள இனவெறி அரசுடனுள்ள உறவுகளை துண்டிக்க மறுக்கும் இந்தி இனவெறி அரசுடன் கூடிக்குலாவும் இவர்கள் இப்படி சந்தர்ப்பவாத முறையில் செயல்பட காரணமென்ன ? ஏனெனில் இவர்களுக்கு மக்களின்மீதும் அவர்களின் விருப்பபூர்வமான போராட்ட செயல்பாட்டின் மீதும் நம்பிக்கையில்லை. வரலாற்றை மாற்றியமைப்பவர்கள் மக்களே என்பதற்குப் பதில் தனி நபர்களே என்ற பிற்போக்கு தத்துவத்தின் கதாநாயகர்கள் இவர்கள். எனவேதான் தனது அமைப்பிலுள்ள சகதோழர்களைக்கூட நம்பாது அடுத்த இயக்கத்தவரை பார்த்தாலோ பேசினாலோ கற்பு பறிபோய்விடுமென சந்தேகப்படுகின்றனர். விருப்பபூர்வமாக அமைப்பில் செயல்படுவதற்குப்பதில் தன்னை கேள்வி கேட்டாலே படுகொலை செய்துவிடுவேனென பயமுறுத்தி அவர்களை அமைப்பிற்குள் நிறுத்திவைக்க முயற்சிக்கின்றனர். சகதோழர்களைகூட நம்பாமல் சந்தேகப்படும் இவர்கள் தனது காட்டு தர்பாருக்கு ஆமாம் சாமிகளாயும் காவடி தூக்குபவர்களாயும் மட்டுமே தனது அணிகள் இருக்கவேண்டுமென்கின்றனர். தன் அணிகளுக்கே உரிமையளிக்க மறுப்பவர்கள் மக்களுக்கு எப்படி உரிமை வழங்குவார்கள்? இத்தகைய கதாநாயக போட்டியிலேயே இவர்கள் பிளவுபட்டு கிடக்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் தனி நபர்களே வரலாற்றை மாற்றுபவர்கள் என்பதைவிடவும் கேவலமான விதத்தில் கொலை தொழிலை திறமையாக செய்யக்கூடிய கசாப்புக் கடைக்காரர்களே வரலாற்றை மாற்றுபவர்கள் என்னும் சோசலிச சித்தாந்தம் உடையவர்கள்.

கட்சிக்கும் படைக்குமிடையேயான வேறுபாடும் கட்சியே துப்பாக்கிமீது ஆணைசெலுத்த வேண்டுமென்பது பற்றியும் இந்த சோசலிசவாதிகள் கவலைப்படுவதில்லை. மாறாக துப்பாக்கியே கட்சிமீது ஆணைசெலுத்த வேண்டுமென்றும் சித்தாந்தத்தை உடையவர்களிவர்கள். எனவேதான் தனது அமைப்பின் உறுப்பினர்மீதும், மக்கள்மீதும், (எதிரியின் மீதென்பது இரண்டாம் பட்சமே) ஏழைகள்மீதும் இவர்கள் துப்பாக்கி மூலமாக ஆணையிட்டு பயமுறுத்தி செயல்படுத்த முயற்சிக்கின்றனர்.

மக்களின் விடுதலைக்காக அமைக்கப்படும் கட்சியும் படையும் மக்களது கட்சியாயும் மக்களது படையாயும் செயல்பட்டால் மட்டுமே உரிமையற்ற தமிழர்களுக்கு உரிமையளிக்கும் அமைப்புக்களாக அவை அமையுமென்பதுபற்றி இந்த சோசலிச வாதிகள் கவலைப்படுவதில்லை. பிற்போக்கு ஜெயவர்த்தன கும்பல் கட்டியமைத்திருப்பது போன்றதொரு கூலிப்படையையே இவர்கள் கட்டியமைக்க விரும்புகின்றனர். எனவேதான் விவாதிக்கும் உரிமை, கேள்விகேட்கும் உரிமைகளைக்கூட தனது அணிகளுக்கு தர மறுக்கின்றனர். விருப்பபூர்வமான கட்டுப்பாடை நிலைநிறுத்துவதற்குப் பதில், வறட்டுத்தனமான துப்பாக்கி முனையிலான கட்டுப்பாட்டை திணிக்க முயற்சித்து தோல்வியடைகின்றனர். அதனால் ஒவ்வொரு முறையும் கட்டுப்பாட்டை போடும் தலைவராலேயே அக்கட்டுப்பாடு உடைக்கப்படுகிறது. அதன்பிறகு புதுக்கட்டுப்பாடு முளைக்கிறது. அதுவரை கட்டுப்பாட்டை மீறினாரெனக்கூறி சுடுபட்டவர்கள் கதி அந்தோ !

எல்லாவற்றிற்கும் மேலாக எதிரி யார்? நண்பன் யார்? என்ற எல்லைக்கோடே இவர்களுக்கு கிடையாது ? தலைவர் தானடித்த மூப்பாக கனவு கண்டெழுந்ததும் யாரை எதிரி என்கிறாரோ அவரை அணிகள் கொல்லவேண்டும். மக்களுக்கும் எதிரிக்குமிடையிலான முரண்பாட்டை தீர்க்கும் வழிமுறைக்கும், மக்களுக்கிடையிலான முரண்பாட்டை தீர்க்கும் வழிமுறைக்குமிடையிலான வேறுபாட்டைப்பற்றி இந்த சோசலிச வாதிகள் கவலைப்பட்டதில்லை. ஏனெனில் தலைவருக்கு காவடி தூக்க மறுத்தால் அவர் சுட்டுக்கொல்லப்படவேண்டிய துரோகியென்பதே தலைவர் கூறும் விளக்கம்.

மக்களுக்கெதிரான நலனையும் அதனால் மக்களுக்கு எதிரியாயும், அந்நலனைப் பாதுகாத்துக்கொள்ள பயிற்சியளிக்கப்பட்ட பலாத்காரமான படையையும் எதிரி கொண்டிருப்பதால் எதிரியுடனான முரண்பாடென்பது சமாதான காந்தீயவழிகளில் தீரக்கூடியதல்ல. அப்படி தீர்க்கமுடியுமென்பது தமிழினத்தை சிங்கள இன வெறியருக்கு காட்டிக்கொடுக்கும் தமிழின துரோகிகளான தமிழ் நிலப்பிரபுத்துவ தரகுக்கும்பலின் வழிமுறையாகும். எனவேதான் காந்தீய வழியென்பது காட்டிக்கொடுக்கும் வழியென்றும் பேச்சுவார்த்தை என்பது மீண்டுமொரு தமிழின துரோகமென்றும் நாம் கூறுகிறோம். ஆனால் ஏழைகள், உழைக்கும் மக்கள், போராளி பிரிவுகள், தோழர்கள், நண்பர்களின் நலன்கள் எதுவுமே ஒட்டுமொத்த மக்களுடைய நலன்களுக்கு எதிரானதல்ல. எனவே அவர்கள் எப்பொழுதும் எதிரியாகமாட்டார்கள். இவர்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடென்பது சரிக்கும் பிழைக்குமிடையில் ஏற்படும் முரண்பாடு. யார் கூறுவது சரியான கருத்து என்பதே முன்னுள்ள கேள்வியாகும். கருத்து சுதந்திரத்தின் மூலமே, விவாதங்களின்

www.tamilarangam.net



மூலமே இப்பிரச்சினையை தீர்க்கமுடியும். எனவேதான் நமது அமைப்புக்கு விமர்சன, சுயவிமர்சன நடையையும் ஜனநாயக மத்தியத்துவ நடையையும் நாம் பின்பற்றவேண்டியிருக்கிறது. இதுவே மக்கள் ஜனநாயக நடைமுறையாகும். இத்தகைய மக்கள் ஜனநாயக நடைமுறையை தனது அமைப்பிற்குள் பின்பற்றக்கூடிய ஒரு அமைப்புதான் உரிமையற்ற மக்களுக்கும் உரிமைகளை அழிக்கக்கூடியதாயிருக்கும். ஆனால் மக்களுடைய விடுதலையை விரும்பாது இந்திய எசமானுக்கு தமிழினத்தை அடகு வைக்க காவடி தூக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கு இவைகள் அவசியமில்லாதவையே. இவர்களைப் பொறுத்தவரையில் சகபோராளிகளைப் படுகொலை செய்து மூடி மறைக்கக்கூடிய கசாப்பு தொழில் மட்டுமே செய்திருந்தாலேயே போதுமானது. எனவேதான் இந்த அமைப்புகள் தனக்குள்ளும் அமைப்புக்களுக்கிடையிலும் சுடுபட்டு சாகின்றனர்.

இயக்க பயிச்சி முகாம்களில் தமது கட்டுப்பாட்டிற்கு கீழ்ப்படியாதவர் என்ற போர்வையிலும், மாற்று இயக்க பேர்வழி என்ற போர்வையிலும் தலைமைக்கு எதிராக கேள்வி கேட்டவர்கள் சித்திரவதை செய்யப்படுவது, சாகடிக்கப்படுவது அன்றுமுதல் இன்றுவரை தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது. சில போராளிகள் சித்திரவதை தாங்காது தற்கொலை செய்துகொள்கின்றனர். உணர்ச்சிவசப்பட்ட நிலையில் வெறுமனே ஆயுத கவர்ச்சியை நம்பி சென்ற போராளிகள் காலம் செல்ல ஆயுதமோகம் குறைய, ஓரளவு தெளிவு பெறும்போது தலைமையின் அதிகாரமமதைக்கு எதிராக கேள்வி கேட்பது இயற்கையே. ஆனால் கேள்வி கேட்பவர்கள் தனி மனிதனாக அல்லது சிறுகுழுவாக இருப்பதனால் தலைமையினால் வெகுசுலபமாக சாகடிக்கப்படுகின்றனர். இவர்கள் சாகடிக்கப்பட்டதன் முழுவிபரம் சகபோராளிகளுக்கோ அல்லது இவர்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைபற்றி இவர்களுடைய தாய் தந்தையருக்கோ அறிவிக்கப்படுவதில்லை. தன்மகன் போராடச் சென்றுவிட்டான் போராட்டம் முடிந்ததும் திரும்பிவிடுவான் என ஏங்கிக் கொண்டிருக்கும் பல தாய்மார்கள் ஏமாற்றமடையப்போவதை எண்ணும்போது எம்மனம் மிகவும் வருந்துகின்றது.

இன்று பெருமளவில் பல போராளிகள் கைதுசெய்யப்படுவதும், பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்படுவதும் தொடர்ச்சியாக நிகழும் நிகழ்வுகளாக உள்ளன. இது போராளிகள் மக்களுடன் இரண்டறக்கலக்காமல் தனித்துவமாக இருந்ததால் ஏற்பட்ட விளைவு என்பதே எம்கருத்து. மக்களையும் போராளிகளையும் பிரிக்க முடியாதவாறு ஒருவருடனொருவர் இரண்டறக்கலந்து ஒருவரில் ஒருவர் சார்ந்து தொழிற்பட்டால் சிங்கள இனவெறி இராணுவத்தால் இவ்வளவு இலகுவாக கைதுசெய்ய முடியாதென்பதே போராட்ட வரலாறுகளிலிருந்து நாம் கற்றுக்கொண்டது. ஆனால் இராணுவமே தனது தொடர்ச்சியான வெற்றிக்கு இயக்க மோதல்களும், அவற்றிற்கிடையேயான பிளவுகளும் காரணமென கூறுகின்றது. இது உண்மையானால் அதாவது அது கூறுவதுபோல் ஒரு பிரிவை கைது செய்ய இன்னொரு பிரிவு தகவல் கொடுப்பது உண்மையானால் அல்லது அத்துலத்முதலியின் இச்சூழ்ச்சிக்கு இயக்கங்கள் பலியாகுமேயானால் அதனாலேற்படும் பாரிய விளைவுகள் எமது போராட்டத்தை பின்னடையச்செய்வது மட்டுமல்ல மிகப் பெரிய இனத்துரோகத்தை சரித்திரமாக ஏற்படுத்தும் எனவே இவ்வாறன நிகழ்ச்சிகளை தடுத்திட

**தனித் தலைமையை மாற்றி கூட்டுத் தலைமையை உருவாக்குவோம்.**

**இயக்கத் தலைவர்களின் அதிகார வெறிக்குப் பலியாகாமல் போராளிகள் நாமனைவரும் ஓரணியில் திரள்வோம்.**

**கூலிப்படை அமைப்பு முறையை மாற்றி விமர்சன, விவாத சுதந்திரம்கொண்ட புரட்சிகர படையொன்றை கட்டுவோம்.**

**இந்திய மாயைக்குப் பலியாகாமல் இன்னொரு இனத்துரோகத்திற்கு இட்டுச்செல்லாமல் சொந்த பலத்திலேயே எமது மக்களின் விடுதலையை நிர்ணயிப்போம்.**

**போராளிகளை இனங்காண்போம் போலிகளை தூக்கியெறிவோம்.**

— வெளியீடு :- **தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்